பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 26 திங்கட்கிழமை (10 - 01 - 2000) VALAMPURI ஒலி: 22

## ★ தமிழ்மக்கள் இழந்த உரிமைகளை வென்றெடுக்க குமார் அரும்பாடுபட்டார்

### அஞ்சலி உரையில் சந்திரசேகரன்

(கொழும்பு)

தமிழ்பேசும் மக்கள் தம்மிடையே நிலவும் கட்சி பேதங்களை மறந்து இழந்துபோன தம் உரிமைகளை வென்றெடுக்க அனைவரும் ஒன்றுபட்டு ஓரணியில் திரள வேண்டும் என்ற குறிக்கோளுடன் குமார் பொன்னம்பலம் இறக்கும்வரை செயற்பட்டார் அதற்காகத் தமிழ்க் கட்சிகளையும் மலையகக்கட்சிகளையும் ஒன்றிணைத்துச் செயல்பட ஆர்வமுடன் உழைத்தார்.

இவ்வாறு மறைந்த அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சி தலைவர் அமரர் குமார் பொன்னம்பலத்தின் இறுதி யாத்திரையின் பின் கனத்தை மயானத்தில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றும் போது மலையக மக்கள் முன்னணித் தலைவரும், நுவரெலியாமாவட்ட எம், பியும் முன்னாள் பிரதி அமைச்சருமான திரு. பெ. சந்திரசேகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. சந்திரசேகரன் தனது அஞ்சலி உரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

இனப்பிரச்சினை ஒன்றினால் இந்தநாடு மிகவும் சீரழித்த நிலையில் காணப்படுகிறது தமிழ மக்களுக்கு உரிமையைப் பெற்றுக்கொடுக்கும் தீர்வு எப்போது வரும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### குமாரின் பூதவுடல் அக்கினியில் சங்கமம்

## குமாரின் இறுதி ஊர்வலத்தில் பல்லாயிரம் மக்கள் பங்கு பற்றினர்

(கொழும்பு)

மறைந்த அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் குழுமியிருக்க நேற்று நண்பகல் 12.45 மணிக்கு அக்கினியுடன் சங்கமமாகியது.

குமாரின் பூதவுடலுக்கு அவரின் மகன் கஜேந்திர குமார் தீ மூட்டினார்.

இதற்கு முன்னதாக ராணி வீதியிலுள்ள பொன்னம்பலத்தின் இல்லத்தில் இறுதிக் கிரியைகள் நேற்றுக் காலை 8 மணிக்கு ஆரம்பமாகியது,

கிரியைகளின் பின்னர் பூதவுடலைத் தாங்கிய பேழை ராணி வீதியூடாக, றீட் அவெனியூ வழியாக, விஜய சேகரமாவத்த பௌத்த லோகமாவத்த வழியாக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### புலோலிப் பகுதி இராணுவம் சுற்றிவளைப்பு இரு இளைஞர் இராணுவத்தால் கைது

(புலோலி)

புலோலிப் பகுதியில் உள்ள உபய கதிர்காமம், வல்லிபுரக்குறிச்சிப் பகுதிகள் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப் பட்டு தேடுதல் நடாத்தப் பட்டது.

நேற்று அதிகாலை 5.30 மணிக்கு இடம் பெற்ற இத் தேடுதலின்போது வத்திராயன் தெற்கு தாளையடியைச் சேர்ந்த கந்தசாமி ரவிக்காந் செம்பியன்பற்று தெற்கு தாளையடியைச் சேர்ந்த கந்தசாமி மதிரூபன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் வடமராட்சி கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து வந்தவர்கள் ஆகும்.

இது தொடர்பாக வடம

(6 ம் பக்கம் பார்க்க)

### புதுக்குடியிருப்பில் அஞ்சலிக்கூட்டம்

(முல்லைத்தீவு)

மறைந்த அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் அமரர் குமார் பொன்னம்பலத்திற்கு புதுக்குடியிருப்பில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த பல முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்கள்.

### தமிழருக்கு ஆறுதல் கூறுவதற்கு அன்றி புலிகளைச் சந்திக்க செல்லவில்லை

### ஜெயலத் எம். பி.

(கொழும்பு)

அரசின் பொருளாதாரத் தடைகளால் பாதிக்கப்பட்டு நலிந்து போய் இருக்கின்ற அப்பாவித் தமிழ் மக்களை ஆறுதல் படுத்தி, மருத்துவ உதவி வழங்கவன்றி அரசாங்கம் நினைப்பதுபோல் புலிகளைச் சந்திக்க நான் வன்னிக்குச் செல்லவில்லை.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி. டாக்டர் ஜெயலத் ஜெயவர்த்தன கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியிருப்பதாவது.

சிங்கள மக்கள் மத்தியில் என்னை ஓர் தேசத்துரோகியாக இனம் காட்டும் முயற்சிகளில் அரசாங்கம் தீவிரமாகச்செயற்பட்டு வருகிறது,

(6 ம் பக்கம் பார்க்க)

### புலிகள் தரப்பில் ஒருவர் உயிரிழப்பு

விடுதலைப் புலிகளால் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டுவரும் ஓயாத அலைகள் -3 நடவடிக்கையின் போது புலிகள் தரப்பில் மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளதுஉயிரிழந்தவரின் விபரம் பின்வருமாறு வீரவேங்கை பிரதீபா (பாலிப்பொடி நிஷாந்தினி மட்டக்களப்பு

### பயணிகள் கப்பல் சேவை

காங்கேசன் துறையிலிருந்து திருகோணமலைக்கான பயணிகள் கப்பல் சேவை எதிர் வரும் 11ம் திகதி இடம்பெறவுள்ளதாக சிவில் நிர்வாக காரியாலயம் அறிவித்துள்ளது.

பயண அனுமதி பெற்றவர்கள் பயணத்திற்கான ஏற்பாடுகளுடனும் அன்றைய மதிய உணவுடனும் 10ம் திகதி காலை 8மணிக்கு புகையிரத நிலையத்திற்கு வருகை தருமாறு அதுமேலும் தெரிவித்துள்ளது.

### உரிமைக்காக போராடிய குமார் என்றும் ஆயுதம் ஏந்தியதில்லை!

தமிழ் மக்களுடைய உரிமைகளுக்கான தனது போராட்டத்தில் அவர் என்றும் துப்பாக்கி ஏந்தியவரல்ல ஆயினும் அரசியல் நோக்கம் கொண்ட ஒரு கொலையாளியால் அவர் இரக்கமற்ற முறையில் துப்பாகியால்சுடப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு குமார்பொன்னம்பலம் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ் கத்தோலிக்க மறை மாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

### வன்னியில் குமாருக்கு அஞ்சலி நிகழ்வுகள்

மறைந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலத்திற்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் பரவலாக இடம்பெற்றன.

வன்னிப் பிரதேசத்தில் கடைகள் பூட்டப்பட்டு வாழை, தோரணங்கள் கறுப்பு, சிவப்பு, மஞ்சள் நிறக்கொடிகள் பறக்க விடப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப் பட்டது.

### நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர்

[கொழும்பு]

மறைந்த தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலம் அவர்களின் பூதவுடலுக்கு முஸ்லீம் காங்கிரஸ் பிரதிநிதி ராகூல் கக்கீம் ஐ. தே. கட்சியில் இருந்து பிரிந்து பொதுசன ஐக்கிய முன்னணியில் இணைந்த எம்' பி. திரு. ரவி கருணநாயக்கா, புளொட் தலை

(6 ம் பக்கம் பார்க்க)

### வவுனியாவில் துக்கம் கடை அடைப்பு

படுகொலை செய்யப்பட்ட அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்கட்சித் தலைவர் குமார் பொன்னம்பலத்தின் இறுதிக் கிரியை தினமான இன்று வவுனியாவில் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது கடைகள் யாவும் மூடப்பட்டு கறுப்புக்கொடிகளும் வாழை தோரணங்களும் கட்டப்பட்டு துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

### பம்பலப்பிட்டியில் 30 பெண்கள் கைது

கடந்த வெள்ளிக்கிழமை இரவு பம்பலப்பிட்டியில் உள்ள பெண்கள் தங்கும் விடுதியில் உள்ள 30 பெண்களைப் கைது செய்து பொலீஸார் விசாரணைக்கு உட்படுத்தினர்.

இதேவேளை நேற்று மீரிகானப் பகுதியில் தேடுதல் நாடத்தியபோது 50 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் எவரும் இதுவரை விடுதலை செய்யப்படவில்லை.

### 35 இளைஞர்கள் தடுத்து வைப்பு

(கொழும்பு)

கொழும்பு, தெகிவளை, கல்கிசை. பகுதிகளில் கடந்த வியாழக் கிழமை ஊரடங்கு சட்டம் பிறப்பித்து தேடுதல் நாடாத்தி கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் 35 பேர் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் விடுதலைப்புலி

(6 ஆம் பக்கம் பார்க்க)

### அன்பு வாசகர்களுக்கு!

நாளைய வலம்புரியில்

க. பொ. த. (உயர்தர)

மாணவர்களுக்கான பொது சாதாரணப் பரீட்சைக்குரிய கேள்வி அமைப்புகள் வெளிவரும்

## இராசி பலன்

10 01-2000 திங்கட்கிழமை தமிழுக்கு (மார்கழி-26] சதுர்த்தி முளுநாழும் அவிட்டம் பகல் 3.24 வரை. சித்தயோகம், இராகுகாலம் காலை 8.33 முதல் 10.00 வரை. சுபநேரம்10.04 முதல் 2. 34 வரை. சதுர்த்திவிரதம்

**மேடம்**
உயர்ந்தஸ்தானம், பணவரவு, அறிஞர் ஆதரவு

**இடபம்**
விதண்டாவாதம், மனச்சலிப்பு, காரியதடை.

**மிதுனம்**
மனச்சஞ்சலம், தொழில் கஸ்டம், அலைச்சல்.

**கடகம்**
குடும்பச்சிறப்பு, நண்பர் உறவு, பயண அலுவலம்.

**சிங்கம்**
வாதத்திறமை, தொழில் வெற்றி, தானதர்மம்.

**கன்னி**
மனப்போராட்டம், சகோதர கவலை, பணக்கஸ்டம்.

**துலாம்**
துயரச்செய்தி, அகால உணவு, அதிகாரிகள் சினம்.

**விருச்சிகம்**
உறவினர் சிறப்பு, சுபகாரிய நிகழ்வு, சந்தோஸம்.

**தனுசு**
நவறிழைத்தல், வாக்குப் பகை, குறைகேட்டல்.

**மகரம்**
புதிய முயற்சி, பினக்குத் திரல், அமைதிப் பெருமூச்சு.

**கும்பம்**
ஒதுங்கிப்போதல், வேற்றுமை, காரியதாமதம்.

**மீனம்**
இல்லச்சிறப்பு, போராடி வெல்லுதல் தெய்வீக சிந்தனை.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

அனுஷியா.

## உள்ளூர் மருந்து உற்பத்தியாளருக்கு சலுகை வழங்க திறைசேரி இணக்கம்

(கொழும்பு)

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, இலங்கை தேசிய கைத்தொழில் சம்மேளனம், ஆகியவற்றின் பிரதிநிதிகளுக்கிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளுக்கமைய உள்ளூர் மருந்து உற்பத்தியாளருக்கு சலுகை வழங்க அரசாங்க திறைசேரி இணக்கம் தெரிவித்துள்ளது.

இந்நாளையடுத்து உள்ளூர் மருந்து உற்பத்தியாளர்களும் மருந்து விநியோகஸ்தர்களும் பெரும் நன்மையடைவர் என்று நம்பப்படுகிறது.

இதற்கமைய அரசாங்க மருந்துக் கூட்டுத்தாபனங்களுக்கு மருந்துகளை வழங்கவிருக்கும் உள்ளூர் கேள்விப் பத்திரதாரர்கள் இதற்கான கொடுப்பனவை டொலர் விகிதாசாரத்திற்கமையபெறுவார்களென இலங்கை தேசிய கைத்தொழிற் சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் அசோகா தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

(க-09)

**ஜனாதிபதியின்**

## இனப்பிரச்சனை தீர்வு முயற்சிக்கு அரசதொழிற் சங்கம் பாராட்டு

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருக்கும் திருமதி சந்திரிக்கா பண்டார நாயக்க குமாரதுங்கா தேசிய அரசொன்றின் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எதிர்க் கட்சியினருக்கு அழைப்பு விடுத்திருப்பதை அரசசேவை தொழிற் சங்கக் கூட்டமைப்புப் பாராட்டியுள்ளது.

இத்தொழிற்சங்க கூட்டமைப்புநாடு பூராவும் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு மக்கள் ஆதரவைத் திரட்டத் திட்டமிட்டுள்ளதாக மாகாணசபைகள் உள்ளூராட்சித் துறை அமைச்சர் எஸ். அலவி மௌலானா தெரிவித்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

## தென்மராட்சியில் தென்னை மரங்களுக்கு புதுவித நோய் ஏற்படுவதாக புகார்

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாழ் பகுதியிலுள்ள தென்னந் தோட்டங்களிலுள்ள தென்னை மரங்களுக்கு புதுவித நோய் ஒன்று தற்போது ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி தென்னச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக தென்னைச் செய்கையாளர்கள் தென்னை அபிவிருத்திச் சபையின் அதிகாரிகள் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளதாகவும், அதனைத் தொடர்ந்து உரிய நடவடிக்கைகளை சபை உத்தியோகத்தர் மேற்கொண்டதாகவும் அறியப்படுகிறது.

தென்னை மரங்களில் நோய் ஏற்படும் பட்சத்தில் உடனடியாக எழுத்து மூலம் நல்லூரிலுள்ள தென்னை அபிவிருத்திச் சபை அதிகாரிக்குத் தெரிவிக்கும் படியும் கேட்கப்பட்டுள்ளனர்.

(க)

## விளையாட்டுச் செய்தி

## நியூசிலாந்து அணி மே. இந்திய அணியை 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது

[வெலிங்டன்]

நேற்று நியூசிலாந்தில் நடைபெற்ற நான்காவது சர்வதேச ஒரு நாள் போட்டியில் நியூசிலாந்து அணி மேற்கிந்திய தீவுகள் அணியை 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி நியூசிலாந்து அணியின் சிறப்பான பந்து வீச்சினால் நிலை குலைந்து மிக மெதுவாக தனது ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தியது இறுதியாக 171 ஓட்டங்களுக்குள் தனது அனைத்து இலக்குகளையும் இழந்தது.

172 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி ஆரம்பத்திலேயே தன் இரு விக்கெட்டுக்களை இழந்தாலும் நதன் அஸ்ரல்ரொயட்டுவஸ் இணை ஜோடி சிறப்பாக ஆடி இரண்டாவது விக்கெட் ஜோடியாக 149 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து மேற்கிந்திய தீவுகள் அணியை நியூசிலாந்து அணி 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற வழி வகுத்தனர்.

நதன் அஸ்ரல், ரொயட்டுவஸ் ஆகியோர் ஆட்டமிழக்காது முறையே 76, 68 ஓட்டங்களைப் பெற்றனர். நதன் அஸ்ரல் ஆட்டநாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

நடைபெற்று முடிந்த நான்கு போட்டிகளிலும் நியூசிலாந்து அணி வெற்றி பெற்று 4-0 என்ற நிலையில் உள்ளது. ஐந்தாவதும் இறுதியுமான ஆட்டம் நாளை ஆரம்பமாகும். [த-29]

**முதலாவது போட்டியில்**

## பாகிஸ்தான் 45 ஓட்டங்களால் அவுஸ்திரேலியாவை வென்றது

(கன்பரா)

அவுஸ்திரேலியாவில்நேற்று நடைபெற்ற முத்தரப்பு ஒரு நாள் போட்டித்தொடரின் முதலாவது போட்டியில் பாகிஸ்தான் அணி 45 ஓட்டங்களால் அவுஸ்திரேலிய அணியைத் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சில் மளமளவென தமது இலக்குகளை இழந்தாலும் பின்வரிசை ஆட்டக்காரர்கள் நின்று நிதானித்து ஆடி தமது அணியின் ஓட்ட எண்ணிக்கையை ஓரளவேனும் உயர்த்தினர் இறுதியாக பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றனர் பாகிஸ்தான் அணியில் அதிகபட்சமாக குமாயின் கான் 33 ஓட்டங்களையும் அணித்தலைவர் வசீம் அக்ரம்34 ஓட்டங்களையும் சக்லைன் முஸ்டாக் ஆட்டமிழக்காது 37 ஓட்டங்களையும் பெற்றனர் அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்

[5 ம் பக்கம் பார்க்க]

## சிரியாவுடனான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புண்டு - இஸ்ரேல் பிரதமர்

சிரியாவுடனான அமைதிப் பேச்சில் கலந்துகொள்ள அமெரிக்கா சென்றிருந்தஇஸ்ரேலிய பிரதமர் எஹிட் பராக் தாயகம் திரும்பவிருக்கிறார்.

இன்று இரவு இஸ்ரேல் திரும்பிவிடக்கூடும் என்று தெரியவருவதுடன், தாம் இல்லாத போதும் தொடர்ந்தும் சிறிய அளவில் பேச்சுவார்த்தைகள் நடைபெறும் என்று எஹிட் ப்ராக் அறிவித்திருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அடுத்த மாதம் மீண்டும் நேரடிச்சந்திப்பு பேச்சுவார்த்தை இடம்பெறலாம் என்றும் நடைபெற்ற பேச்சுக்களில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் பராக் தெரிவித்திருக்கிறார்.

இஸ்ரேல் பிரதமருடன் பேச்சுவார்த்தையின் பொருட்டு அமெரிக்கா சென்றிருந்த சிரிய வெளியுறவு அமைச்சர் பருக் அல்சாராவும் இன்றிரவு நாடு திரும்புவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(க-09)

**ஜம்முவில்**

## தீவிரவாதிகளின் தாக்குதலில் நான்கு படையினர் பலி

(ஸ்ரீ நகர்)

ஜம்முகாஷ்மீரின் ஸ்ரீநகர் பகுதியில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் பாதுகாப்புப் படையைச்சேர்ந்த 4 வீரர்கள் கொல்லப்பட்டதுடன் 2 பேர் காயம் அடைந்ததகாவும் பொலிஸ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்; ஸ்ரீநகர் வானிலை ஆராய்ச்சிமையமருகே கடந்த 6 ஆம் திகதி பயங்கரவாதிகள் நடாத்திய தாக்குதலில் மத்திய பாதுகாப்பு படையைசேர்ந்த 4 வீரர்கள்உயிரிழந்ததுடன்இருவர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, அண்மைக் காலமாக காஷ்மீர் பகுதியில் பயங்கரவாதிகளின் நடவடிக்கைகள் அதிகரித்து வருவதும் கடந்த 3ஆம் திகதி காஷ்மீர் சந்தையில் இடம்பெற்ற பெரும் குண்டு வெடிப்பில் 11பேர் கொல்லப்பட்டமையும் தெரிந்ததே. (க-9)

### 8பேர் பலி

பிகாரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ரயில் விபத்தில் 8 பேர்வரை கொல்லப்பட்டுள்ளனர் 10 பேர் படுகாயங்களுக்குஇலக்காகியுள்ளனர்.

பாட்னா ரயில்நிலையத்தில் இடம்பெற்ற இவ்விபத்தில் காயமடைந்தோர் உடனடியாக அருகில்உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர், (க-09)

## செச்சினிய போராளிகள் நால்வர் ரஷ்ய படையினரால் கைது!

(குரொஷ்னி)

செச்சினியா மீதான முற்றுகைப் போரில் பலத்த எதிர்ப்புக்களின் மத்தியில் முன்னேறும் ரஷ்யப் படையினர் 4 செச்சினிய போராளிகளைக் கைதுசெய்து தடுத்து வைத்துள்ளனர்.

வெடி மருந்துகள், போலி ஆவணங்கள், புகைப்படங்கள், அடையாள அட்டைகள் என்பவற்றுடன் கைது செய்யப்பட்டுள்ள நான்கு செச்சினியர்களும் பல்வேறு கடத்தல்கள், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களாக இருக்கலாம் என ரஷ்ய தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கைப்பற்றப்பட்ட பொருட்கள் செச்சினியர்களுடனான மோதலின் போர்து காணாமற்போன ரஷ்யப் படைகளுடையவை எனவும் தெரியவருகிறது.

இதேவேளையில் ரஷ்யப் படைகளும், செச்சினிய வீரர்களும் வானொலி மூலம் தொடர்பு கொண்டு யுத்தத்தில் கொல்லப்பட்ட தமது சகாக்களுடைய சடலங்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகிறார்கள். (க-9)

## குற்றம் புரிந்தவர் யாராக இருந்தாலும் தண்டனையிலிருந்து தப்ப முடியாது

### மலேசிய துணைப்பிரதமர் எச்சரிக்கை

பொலிஸ்காரர்களும் இராணுவ வீரர்களும்கூட குற்றம் புரிந்துவிட்டு தப்பமுடியாது என மலேசியத் துணைப் பிரதமர் அப்துல்லா முகமது கடாபி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மலேசிய கிளாம்வாலி என்ற இடத்தில் நிகழ்ந்த திடீர் கொள்ளைகளில் தொடர்பு இருப்பதாக கைது செய்யப்பட்ட 4 பொலிசாருடைய பெயர் விபரங்களை மலேசிய நாளேடு ஒன்று வெளியிட்டிருந்தது. இதனைத் தொடர்ந்தே துணைப் பிரதமர் இந்தக் கடுமையான எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

இந்த 4 பொலிசாரில் ஒருவர் பொலிஸ் துறை துணைக் கண்காணிப்பாளர் என்றும் சூதாட்ட விடுதிகள் தடை செய்யப்பட்ட விளையாட்டு நிலையங்கள், ஆபாச வீடியோமையங்கள் ஆகியவற்றோடு இவருக்கு தொடர்பு இருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது, (க-9)

## கடந்த வருடத்தில் மட்டும் 33பத்திரிகையாளர் படுகொலை

(நியூயோர்க்)

உலகளாவிய ரீதியில் 33பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள்1999 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டதாக பத்திரிகையாளரைப் பாதுகாப்பதற்கான அமெரிக்க கமிட்டி தெரிவித்துள்ளது.

இந் நிறுவனம் மேலும்தெரிவிக்கையில்; பத்திரிகையாளருக்கு மிகவும் ஆபத்தாக உள்ள நாடு சிராலியோன் தான் என்றும் கூறுகின்றது.

மேலும் யூகோஸ்லாவியா, கொலம்பியா, கிழக்குத் திமோர், செச்செனியா போன்ற நாடுகளிலும் இவர்களுக்கு ஆபத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

### 20 பேர் பலி

லெபனான் இராணுவத்தினருக்கும் இஸ்லாமிய தீவிரவாதிகளுக்குமிடையில் நடைபெற்ற மோதல் சம்பவமொன்றில் சுமார் 20 பேர் பலியாகியுள்ளனர்.

இதேவேளை பெய்ரூட்டிலுள்ள ரஷ்ய தூதரகத்தின் மீது கைக்குண்டுத் தாக்குதலை நடாத்திய பாலஸ்தீன தீவிரவாதியொருவர் லெபனானிய படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

## மின் இணைப்பு வழங்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணி அருள்மிகு ஸ்ரீ நாககன்னி அம்பாள் ஆலயம், மற்றும் நாமகள் சனசமூக நிலையத்திற்கு அண்மையில் மின்னிணைப்பு வழங்கப்பட்டது.

ஈழமக்கள் ஜனநாயக முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகனால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்தே இம் மின்னிணைப்புகள் வழங்கப்பட்டன.

வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன் உட்பட பல பிரமுகர்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

18 ஆயிரம் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்ட இம்மின்னிணைப்பு வேலைகள் திருப்தி கரமாக செய்யப்பட்டமை குறித்து இப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

## மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடேற்பட்டுள்ளது.

இதனால் இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெறவரும் நோயாளர்கள் பாதிப்படைந்து வருகின்றனர்.

இவ் வைத்தியசாலையின் மருந்து வகைகள் தட்டுப்பாட்டை நீக்கச் சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(52)

## அனுமதி சீட்டுக்கள் வழங்கல்

(வரணி)

குடமியன்வரணி இராணுவத்தினரின் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே இருப்பவர்கள் உள்ளே வரவும் உள்ளே இருப்பவர்கள் வெளியே செல்வதற்குமான புதிய ஆண்டுக்கான அனுமதி சீட்டுக்கள் வழங்கப்பட்டு வருகின்றது (க-28)

## ஊனமுற்ற மாணவருக்கு உதவித் தொகை

(அச்சுவேலி)

யாழ். ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தும் நிறுவனத்தினர் செயற்கை அவயம் பொருத்திக்கொண்ட மாணவர்களுக்கு அவர்களின் கல்விச்செலவிற்காக மாதாந்தம் 250 ரூபா உதவித்தொகையாக வழங்கப்பட்டு வருவதாக அந் நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந் நிறுவனத்தினால் ஊனமுற்ற மாணவர்களின் விளையாட்டுத்திறனை விருத்திசெய்யும் வகையில் அவர்களுக்கான விளையாட்டுப் போட்டி ஒன்றினை கடந்த வருடம் நடாத்தியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-14)

## ஊர்காவற்றுறையில் கோ. கல்வி அலுவலகம்

ஊர்காவற்றுறைக் கோட்டம் மிகவிரைவில் ஊர்காவற்றுறைபுனிதஅந்தேனியார் கல்லூரியில் இயங்கவுள்ளது.

இதற்காக கல்லூரியின் அதிபர் அலுவலகம் ஒதுக்கப்பட்டுள்ளது அதிபரின் அலுவலகம் கல்லூரியின் புதிய தோர் கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. (ந)

# குருநாகல் மகாவித்தியாலயத்தில் ஒதுக்கப்படும் தமிழ் மாணவர்கள்

(குருநாகல்)

குருநாகல் இந்துதமிழ் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாது பெரிதும் சிரமமுறுவதாக அப்பகுதி கல்வியாளர்கள் பலரும் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது: இப்பாடசாலையில நீண்டகாலமாக நடாத்திய போராட்டத்தின் காரணமாக க. பொ. த. (உயர் தர) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது,

ஆனால் சிறிது காலத்தில் அவ் வகுப்பு நிறுத்தப்பட்டு விட்டது.

இதே வேளையில் இப் பாடசாலையில் அதிபர் தரம் இல்லாத சிங்களப் பெண்மணியே தொடர்ந்தும் அதிபராகக் கடமையாற்றி வருகிறார்.

இது தொடர்பாக உரியவர்களிடம் தெரிவித்தும் கூட எதுவித நடவடிக்கையும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை

இப் பாடசாலையில் கல்வி கற்பித்த பல தமிழ் ஆசிரியர்களும் கூடகுறிப்பிட்ட அதிபர் தனது செல்வாக்கைப் பாவித்து வேறு பாடசாலைகளுக்கு இடம் மாற்றியுள்ளார்.

அது மட்டுமல்ல இப் பாடசாலையில் அதிபராகக் கடமை புரியும் சிங்களப் பெண்மணி ஓய்வு பெறும் வயதினை அடைந்தும் கூட சேவை நீடிப்புப் பெற்றுள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக கல்வித்திணைக்களம் உருப்படியாக எதுவித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லையென பரவலாக அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது, (க)

### பதவியை எதிர்பார்க்காமல்

## சமாதானத்தை நோக்காக கொண்டு ஐ.தே. கட்சி அரசுடன் இணையவேண்டும்

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அமைச்சர் பதவிகளை எதிர்பார்க்காமல் நல்ல நோக்கத்துடன் ஐக்கிய தேசியக் கட்சியினர் பொதுஜன ஐக்கிய முன்னணியினருடன் இணைய வேண்டும் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றில் இடம்பெற்ற அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை பற்றி விவாதத்திற்கு பதிலளித்து உரையாற்றிய போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே சிலர் அரசாங்கம் அமைப்பது பற்றித் திட்டம் தீட்டத் தொடங்கினர். 5 பேர் பிரதமர்களாக வருவதற்குப் போட்டியிட்டனர். வாக்களிப்பு நிலையங்களில் மோசடி செய்வதற்கு முனைந்தனர் ஆனால் தோல்வியையே தழுவிக் கொண்டனர்.

1977 இல் திருமதி பண்டாரநாயக்கா தோல்வியடைந்த போதும் சபைக்கு வந்து முகங் கொடுத்தார் ஆனால் உங்கள் தலைவர் எங்கே என்று கேள்வி எழுப்பினார். (05)

## யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆய்வுப் பட்டறை

(தென்மராட்சி)

கொழும்பிலுள்ள மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டின் பேரில் உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் இம் மாதம் 12-ம் திகதி யாழ். பஸ்ரியன் மண்டபத்தில் புனரமைப்பு நிவாரணம் மீள் சமரச நடவடிக்கைகளுக்கான செயல் வரைபு ஆய்வுப்பட்டறை ஒன்றினை நடாத்தவுள்ளது.

இணையத்தின் தலைவர் திரு. பொ. விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆய்வுப்பட்டறையில் இலக்குக் குடும்பங்கள் சார்ந்த பங்குபற்றுபவர்களாக விவசாயிகள், மீனவர்கள், பிரதான குடியிருப்பாளர்களை இழந்தவர்கள், மாணவர்கள், வர்த்தகர்கள் உட்பட வேறும் பலர் பங்கு கொள்ளவுள்ளனர் என் ஆய்வுப் பட்டறையின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளார்.

இந்த ஆய்வுப்பட்டறையின் இரண்டாம் கட்டம் இம்மாதம் 17-ம் திகதியும் மூன்றாம் கட்டம் 19-ம் திகதியும் பஸ்ரியன் மண்டபத்தில் நடாத்தப்படும்.

இரண்டாம் மூன்றாம் கட்ட ஆய்வுப்பட்டறைகளில் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகள், உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரசாங்க திணைக்களங்களின் தலைவர்களும் பங்குபற்றுவார்கள் எனவும் தெரியவருகின்றது.

ஒவ்வொரு ஆய்வுப்பட்டறையிலும் 40 பங்குபற்றுநர்கள் பங்கு கொள்வார்கள்.

## அதிகரிக்கும் கசிப்பு விற்பனையால் கள் உற்பத்தி வெகுவாகப் பாதிப்பு

(தென்மராட்சி)

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்திலுள்ள கரம்பைக் குறிச்சி, இடைக்குறிச்சி, கொடிகாமம் பகுதிகளில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் தீவிரமடைந்துள்ளது.

இதன் காரணமாக கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கள்ளு விற்பனவு நிலையங்களில் விற்பனை பெரிய அளவில் வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

இப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தியையும் விற்பனையையும் நிறுத்துவதற்காக மேற்கொண்ட முயற்சிகள் பலனளிக்கவில்லை எனவும் அறியப்படுகின்றது. (க)

## கால் நடைகளின் உறைவிடமாக மாறும் சாவகச்சேரி கரையோரங்கள்

[தென்மராட்சி]

சாவகச்சேரி நகரத்தின் கரையோரப் பகுதிகளில் குடியிருந்த குடும்பங்கள் ஷெல் வீச்சு தொடர்பான அச்சம் காரணமாக இடம் பெயர்ந்துள்ளமையினால் அக்குடும்பங்களின் பராமரிப்பில் இருந்த ஆடுகள், நாய்கள் மற்றும் பூனைகள் போன்றவற்றின் நடமாட்டம் சாவகச்சேரி நகரம், பஸ் நிலையம் போன்ற இடங்களில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு முன்பாக தினமும் 50 முதல் 75 ஆடுகள் அலைந்து திரிவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இதனால் நகரப்பகுதியில் வாகன ஓட்டுனர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

## இட மாற்றம் இரத்து

(புலோலி)

பருத்தித்துறை பிரதேச சபையில் கடமையாற்றும் தொழில் நுட்ப உத்தியோகத்தர் திரு. எஸ். அருட்செல்வம் இலிகிதர்களான திருமதி தனலட்சுமி நந்தகுமார், திரு. எஸ். பூபாலசிங்கம் ஆகியோரது இட மாற்றங்கள் உள்ளூராட்சித் திணைக்களத்தால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் திரு. ஐ. ஸ்ரீரங்கேஸ்வரனின் கோரிக்கையை அடுத்தே இவ் இட மாற்றங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-52)

## பருத்தித்துறையில் ரூ. 3இலட்சம் செலவில் சிறுவர் பூங்கா நிர்மாணிப்பு

(பு லாலி)

பருத்தித்துறை நகரசபை பருத்தித்துறை கடற் கரை நடராஜர் கலையரங்கப் பகுதியில் சுமார் மூன்று இலட்சம் ரூபா செலவில் சிறுவர் பூங்கா ஒன்றை நிர்மாணித்து வருகின்றது. இச் சிறுவர் பூங்கா வெகு விரைவில் திறந்து வைக்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை கரையோரப் பகுதி மக்களின் நன்மை கருதி குடிதண்ணீர் விநியோகத்திட்டமொன்றை ''பெளசர்'' மூலம் நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் நகரசபைத் தலைவர் வி. விஜயரட்ணம் தெரிவித்துள்ளார். [க-52]

## பாடசாலைகள் இடமாற்றம்

(மந்திகை)

தொடர்ந்துவரும் யுத்தத்தினால் பாடசாலைகள் இடம் மாற்றப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கில் பதற்ற நிலை நீடிப்பதை அடுத்து இடம்பெயர்ந்துள்ள மாணவர்களுக்காக உடுத்துறை மகாவித்தியாலயம், மருதங்கேணி இ.த.க. பாடசாலை ஆகியன செம்பியன் பற்று றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக வடமராட்சிவலய நிர்வாக அதிகாரி தெரிவித்துள்ளார்.

(க-23)

## நீர் இறைக்கும் இயந்திரம் அன்பளிப்பு

(மந்திகை)

மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு நீர் இறைக்கும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் நீர் விநியோகத்தை சீர் செய்வதற்காக வடமராட்சியில் அமைந்துள்ள 524 வது பிரிகேட்டின் தலைமைச் செயலகத்தினர் இதனை வழங்கியுள்ளனர்.

## பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக் குட்டியின் பவளவிழாவை ஒட்டி வலி வடக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்குபாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் தலா இரண்டு மாணவர்கள் பாடசாலை அதிபர்களின் பரிந்துரையின் கீழ் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

## மக்கள்கோரிக்கை

(நெல்லியடி)

தொண்டமனாறு பாலத்தில் போடப்பட்ட துரிசு நீண்டகாலமாக பழுதுபார்க்கப்படாமல் உள்ளது. இதனால் பருவகாலத்தில் பெய்யும் மழைவெள்ளம் வல்லைக் கடலினுள் சென்று தொண்டமனாறு பாலத்தினூடாக பெரும் கடலினுள் கலக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் அச்சுவேலி, தொண்டமனாறு கரையோரப்பகுதி நிலப்பரப்பு வளம் குன்றும் நிலையினை அடைகின்றது. இதனை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கையினைமேற்கொள்ளுமாறு இப்பகுதி மக்கள் கோருகின்றனர், (க-18)

## ஐஸ்பழ வியாபாரி தாக்கப்பட்டார்

(வரணி)

வரணி இயற்றாலைப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது ஐஸ்பழ வியாபாரி ஒருவர் தாக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. [க-28]

## அழிவுறும் நிலையில் வயல்கள்

(இளவாலை)

இளவாலை பண்டத்தரிப்பு வயல்கள் போதிய மழையில்லாததினால் அழிவுறும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இவர்கள் மேலும் தெரிவிக்கையில்; முன்புபெய்த மழையினால் பண்டத்தரிப்பு, மாதகல் வயல்களின் ஒருபகுதி நாசமடைந்துவிட்டது. இதற்கு இங்கு அமைக்கப்பட்டுள்ள 'பாதுகாப்பணை'யே காரணம் என்று சம்பந்தப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர். இவ் 'அணையை' நீக்குவதற்கு உரியவர்களிடம் எடுத்துக்கூறியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் விசனம் தெரிவித்துள்ளனர்.

(க-12)

வடமராட்சி

# பிரதேசசபை நூலகங்களுக்கு 3இலட்சத்து 50ஆயிரம் நிதி ஒதுக்கீடு

(மந்திகை)

வடமராட்சி தெற்கு— மேற்கு பிரதேசசபைக்கு உள்ளூராட்சி சபையினால் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பிரதேசசபைக்கு உட்பட்ட பொது நூலகங்களுக்கு புத்தகங்கள் கொள்வனவு செய்ய இரண்டு இலட்சம் ரூபாவும், கரவெட்டி இராஜகிராமம் சனசமூக நிலையம் கௌந்தில் சனசமூகநிலையம், மாயக்கை பாரதி சன சமூக நிலையம் ஆகியவற்றின் புனரமைப்புக்காக தலா ஒரு இலட்சம் ரூபாவும்—

கரணவாய் ஸ்ரீ அம்பாள் பாலர் பாடசாலை, உடுப்பிட்டி நாவலர் பாலர் பாடசாலை, சண்டில்குளம் பாலர் பாடசாலை, இமையாணன் விபுலானந்தர் பாலர் பாடசாலை என்பவற்றுக்கு கற்பித்தல் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்ய தலா ஐம்பதாயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கான வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருவதாக அப் பகுதி ஈ.பி.டி.பி. அமைப்பின் பிரதேச சபை தலைவர் வி. நடராஜா தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கிலிருந்து

## சென்றபலர் மலையகத்தில் கைது கூடுதலானோர் பெண்களே

(பதுளை)

வடக்கு – கிழக்கு பகுதியிலிருந்து சென்று பதுளை, பண்டாரவளை, தியத்தலாவை போன்ற பகுதிகளில் தங்கியிருந்த பெருமளவினர் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 150 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாவும் இவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்படுவோரின் அடையாள அட்டைகள் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதாகவும், குறிப்பாக வடக்கு- கிழக்கிலிருந்து சென்றவர்களின் அடையாள அட்டைகள் நுணுக்கமாக பரிசீலிக்கப்படுகின்றன என்றும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (க)

மட்டக்களப்பு பகுதியில்

## முச்சக்கர வண்டிகளில் பொலிஸார் இனிமேல் பயணம் செய்யமாட்டார்கள்

### -பொலிஸ் அதிகாரி உறுதி

[மட்டகளப்பு]

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி பிரதேசத்தில் முச்சக்கர வண்டிகளில் பொலிஸார் பயணம் செய்ய மாட்டார்களென களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எச். ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் இரு பொலிஸார் பயணம்செய்த முச்சக்கர வண்டியின் மீது நடைபெற்ற கிளைமோர் தாக்குதலில் இரு பொலிஸார் மற்றும் ஆட்டோ சாரதி கொல்லப்பட்டதையடுத்து ஆட்டோ சாரதிகள் மத்தியில் ஏற்பட்ட பதற்ற நிலையையடுத்தே மேற்கண்டவாறு பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாராவது பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆட்டோக்களில் பயணம் செய்ய முற்பட்டால் தன்னிடம் முறையீடு செய்யலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கொடுப்பனவு வழங்கல்

(மந்திகை)

நிரந்தர நியமனம் பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான மார்கழி மாத கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகிறது.

கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகங்களில் கடந்த மார்கழி மாதம் நிரந்தர நியமனம் பெற்ற 166 பேருக்கும் அந்தந்த பிரதேச செயலகங்களில் வழங்கப்பட்டு வருகிறது. [க-23]

## யுனிசெவ் உதவி

(கோப்பாய்)

கோப்பாய் வெள்ளெருவைப் பிள்ளையார் சனசமூக நிலைய சிறுவர் பாடசாலைக்கு யுனிசெவ் உதவி வழங்கியுள்ளது.

இதன் பயனாக சிறுவர்களுக்கான மல சல கூடம் உட்பட பல வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை கோப்பாய் பிரதேச சபை மேற்கொண்டது. (க)

## வர்த்தகர்களின் பணம் மற்றும்பொருள் மடகஸ்காரில் கொள்ளையிடப்பட்டன

(கொழும்பு)

இலங்கையிலிருந்து மாணிக்கக் கற்களை கொள்வனவு செய்யும் நோக்குடன் மடகஸ்கார் தீவுக்குச் சென்ற வர்த்தகர்களிடம். பணம், மாணிக்கக் கற்கள் என்பன கொள்ளையிடப்பட்ட சம்பவம் அண்மையில் நிகழ்ந்துள்ளது.

கொள்ளையிடப்பட்ட மாணிக்கக் கற்களின் பெறுமதி ஒரு கோடி ரூபாவுக்கு மேல் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாணிக்க கற்களையும் பணத்தையும் பறிகொடுத்தவர்கள் இரத்தினபுரி பிரபல மாணிக்க வியாபாரிஒருவரும் தற்போது ஜேர்மனியில் வசிக்கும் பலாங்கொடயைச் சேர்ந்தவருமேயாவர்,

இந்த வர்த்தகர்களின் ஜீப் வண்டிகளுக்குத் துப்பாக்கி பிரயோகம் செய்து சாரதிகளைக் காயப்படுத்திய பின்னரே மாணிக்கக் கற்களையும் பணத்தையும் துப்பாக்கிதாரர் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

அத்துடன் பலாங்கொடையைச் சேர்ந்த இளம் வர்த்தகர் ஒருவரின் கடவுச் சீட்டு விமானப் பயண ரிக்கற் ஆகியவற்றையும் கொள்ளையர்கள் எடுத்துச் சென்றுவிட்டதால், பெரும் சிரமங்களுக்கு மத்தியில் தற்காலிக கடவுச் சீட்டுடன் அவர்நாடு திரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-5)

## நடமாடும் வைத்திய சேவை

(வடமராட்சி)

வடமராட்சிகிழக்கு நாகர் கோயில் பகுதி மக்களின் வசதி கருதி பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடமாடும் வைத்திய சேவை இடம்பெற்று வருகிறது.

இச் சேவையை அம்பன் மத்திய மருந்தக வைத்திய அதிகாரி தலமையிலான குழுவினர் மேற் கொண்டு வருகின்றனர். (க-43)

## வெளிநோயாளர் பிரிவு அமைக்கப்படுகிறது

(மந்திகை)

கரவெட்டி மத்திய மருத்துவ வெளிநோயாளர் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுவருகிறது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிதி உதவியின் மூலம் இப்பிரிவு அமைக்கப்பட்டுவருகிறது.

சுமார் 8 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இப் பிரிவு மிக விரைவில் பூர்த்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நோயாளர்கள் வசதி கருதியே இப்பிரிவு அமைக்கப்பட்டுவருவதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-23)

## மக்கள் சிரமம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை துறைமுகத்திற்கு பொருட்களை ஏற்ற வரும் லொறிகள் தரிப்பிட வசதி இன்றி யாழ்ப்பாண பிரதான வீதியில் உள்ள முதலாம் கட்டைச் சந்தியில் வீதியின் இருபுறமும் நிறுத்தப்படுவதால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள்.

பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் மற்றும் வேலைக்குச் செல்லும் ஊழியர்கள் வரை பலரும் போக்குவரத்து கஸ்டத்தால் பெரும் கஷ்டமுறுகின்றனர் (க-11)

## சத்துணவு பொதி வழங்கல்

(மந்திகை)

வடமராட்சிதெற்குமேற்கு பிரதேச சபை தாய் சேய் சத்துணவுப் பொதிகளை வழங்கி வருகிறது.

பிரதேச சபைக்குட்பட்ட போசாக்கற்ற தாய் சேய்களை கருத்திற் கொண்டு இப் பொதிகள் வழங்கப்பட்டு வருகிறது.

இதன் முதல் கட்டமாக கரவெட்டி மத்திய மருத்துவ மனைக்கு 500 சத்துணவு பொதிகளையும், கட்டைவேலி தாய் சேய் சிகிச்சை நிலையத்திற்கு 375 சத்துணவு பொதிகளும் வழங்கியுள்ளதாக வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை செயலாளர் சி. பசுபதி தெரிவித்துள்ளார். (23)

## அனைத்து இந்து ஆலயங்களிலும் அறநெறி பாடசாலைகளை ஆரம்பிக்குக

### பிரதேச செயலர் பணிப்பு

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனைத்து இந்து ஆலயங்களிலும் அறநெறிப் பாடசாலைகளை ஆரம்பித்து நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம் பிள்ளை அனைத்து கிராம சேவையாளர்களையும் அண்மையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இளம் சிறார்கள் மத்தியில் அறக் கோட்பாடுகளையும், இந்துசமய நடைமுறைகளையும், ஆலய வழிபாட்டின் முக்கியத்துவத்தையும் உணர்த்து வேண்டியது அவசியமானத எனப் பிரதேச செயலர கூறியுள்ளார்.

தென்மராட்சி பிரதேசத்தில் தற்போது பத்து அறநெறிப்பாடசாலைகள் செயற் பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## கண்டி மாநகரில் பெரும் தேடுதல்வேட்டை இளைஞர்,யுவதிகள் மீதுதீவிரவிசாரணை

(கொழும்பு)

கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாக கண்டி மாநகரில் அண்மையில் பெரும் தேடுதல் வேட்டையை படையினர் மேற்கொண்டனர்.

இளைஞர், யுவதிகள் படையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும், அடையாள அட்டைகள் இல்லாத இளைஞர், யுவதிகள் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலிருந்துகிடைத்த உத்தரவையடுத்தே இத்தேடுதல் நடாத்தப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## வடிசாராயம் தொடர்பாக 115வழக்குகள் பருத்தித்துறை நீதிமன்றத்தில்

(பருத்தித்துறை)

வடமராட்சி பகுதியில் கடந்த இரு வருடங்களில் மட்டும் சட்டவிரோத வடிசாராயம் வைத்திருந்தவர்கள் மீதான நூற்றிப் பதினைந்து வழக்குகள் வடமராட்சி மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இவ் வழக்குகளில் குற்றவாளிகள் என இனங்காணப்பட்டவர்களிடமிருந்து தண்டப்பணமாக நீதிமன்றத்திற்கு ஒரு இலட்சத்தி 74 ஆயிரத்து 690 ரூபா செலுத்தியதுடன் வதிரி பரமானந்த ஆச்சிரமத்திற்கு 28 ஆயிரத்து 850 ரூபா தர்மப் பணமாகவும் செலுத்தப்பட்டுள்ளது என மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ந. சோதிநாதன் தெரிவித்துள்ளார். (க-11)

# கண்ணீர் அஞ்சலி

எமது அன்பு நண்பன்

ஆ. முகுந்தனின் அன்புத் தந்தையார்

**அமரர் சிவசம்பு ஆனந்தநடராசா**

(மண்டைதீவு)

அவர்கள் கொழும்பு வெள்ளவத்தையில் காலமானார். அவரின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன், அவரின் இழப்பால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

- நண்பர்கள்.

மண்டைதீவு. (00060)

# 31 ஆம் நாள் நினைவலைகள்

அன்னையின் மடியில்: 30 - 10 - 1923



இறைவன் அடியில்: 11 - 12 - 1999

**அமரர் நாகேசு தம்பிமுத்து**

அன்புத் தெய்வமே ஐயாவே
இப் பாதைவிட்டு நீங்களகன்று
ஓர் திங்களகன்றதே
எம் பாசமிகு தந்தையே
உத்தமரே உங்கள் இனியமுகம்
காணாது தவிக்கின்றோம்
இனியேது செய்வோம்!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம்! சாந்தி! சாந்தி! சாந்தி!

உங்கள் பிரிவால் வாடும்:

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

இல: 82/3 யாழ்பாடிவீதி,
யாழ்ப்பாணம்.

(00059)

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.
- குறள்

# வலம்புரி

## அறங்காவல் பணிக்கு ஓர் இலக்கணம்

நிறுவன ரீதியாக சைவம் நிலைக்க அறம் துலங்க வாழ்ந்து கொண்டிருக்கும் பவளவிழாக் காணும் கலாநிதி தங்கம்மா அம்மையார் பற்றி உரையாற்றிய பலரதும் கருத்துக்கள் சிந்திக்க வேண்டியவை.

கந்தபுராணச் சொற்பொழிவுகள் என்னும் நூலை வெளியிட்டு உரையாற்றிய கலாநிதி நா.சுப்பிரமணிய ஐயர் அம்மையார் அறங்காவற்பணிக்கு ஓர்இலக்கணம் என்றார். உலகிலே எங்குமில்லாதவாறு அறங்காவற் பணியினை செம்மையாக செயற்படுத்தும் அம்மையார் எம்மிடை வாழ்வது சைவப்பெருமக்கள்செய்த பாக்கியமே. அவர் காலத்தில் வாழ்வது எமக்கெல்லாம் பெருமையளிக்கின்றது.

விழுதூன்றி நிற்கும் விசாலித்த ஆலமரம் போல் நிழல்தரும் நேரிழையார். நேர்மைக்கு வித்தாகி நிற்கின்ற காரணத்தால் கடல் கடந்த மேற்குலகுகளிலும் தென்கிழக்கு நாடுகளிலும் இருந்து பெருநிதி அவர்தம் கரங்களில் ஒப்படைக்கப்படுகிறது. அஃது அறப்பணிகள் வளர்ந்தோங்க வகை செய்கிறது என பேராயர் ஜெபநேசன் அடிகளார் வாயூறி நின்றார். அன்றியும் பெண்மைக்கு இலக்கணமாய் எங்கள் அன்னைஅமைதிக்கும் வித்திடும் வித்தகியாக வேண்டும். எனவும் விநயமாய் வேண்டிநின்றார்.

துணைவேந்தர் தம் தலைமை உரையில் நிறுவன ரீதியாக அறப்பணிகள் புரியும் அம்மை ஒருவரே என கோடிட்டுக் காட்டினார். அதற்கு மகுடம் வைத்தாற்போல் கூறியதாவது நாவலர் பெருமான் கூடதொண்டுகள் பல புரிந்தும் நிறுவன மேலாண்மைக்கு வித்திடவில்லை நிலைத்து நிற்கும் நிறுவனங்களில்காலூன்றவில்லை. அந்தக் குறையை நிறைவாக்கிய பெருமை பொறை நிறை தங்கத் தலைவிக்கு உண்டு என உரைத்து நின்றார். காலநிதி சுப்பிரமணிய ஐயர். அறிஞர்கள் அந்தணப் பெருமக்கள் அனைவரும் துர்க்கா தேவியின் அவதாரமே அம்மையென வாழ்த்தினர் அவகை வேறுபாடின்றி 'அம்மா' என அழைக்க வாழ்ந்து, வாழ வைக்கும் சைவத்திரு, செந்தமிழ் தேனீ என்றும் வாழ்க.

அன்புடன் ஆசிரியர்

# தமிழாராட்சி மாநாட்டில் ஏற்பட்ட நிகழ்வே நாட்டின் இன்றைய அவல நிலைக்கு காரணம்

**நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டின் போது படுகொலை செய்யப்பட்ட ஒன்பது தியாகிகளின் நினைவாக இக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**

அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றத்தின் மூன்றாவது மாநாடு பாரிஸில் நடைபெற்ற போது நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டை ஈழத்திருநாட்டில் நடத்துவதென்று தமிழாராய்ச்சிமன்றம்எடுத்த தீர்மானத்திற்கு அமைய 4வது தமிழாராய்ச்சி மாநாடு தமிழ்மக்களின் பூரண ஆதரவுடன் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக் கிளையின் தலைவர் அமரத்துவம் அடைந்த யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் வரலாறு காண முடியாதளவுக்கு தமிழ் இளைஞர்களின் எழுச்சி விழாவாகக் கொண்டாடப்பட்டது.

1974 ஆம் ஆண்டில், இலங்கையில் பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா முதலில் இம் மாநாட்டுக்கான அனுமதியை வழங்க மறுத்த போதும் எமது மண்ணில் தமிழ் மக்களின் எழுச்சி விழாவாக தமிழாராய்ச்சி மாநாடு கொண்டாடப்பட்டது.

மாநாட்டின் இறுதி நாள் பகல் நிகழ்ச்சிகள் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கோலாகலமாக நடைபெற்றது. மாலை நிகழ்ச்சிகளை காணவந்த மக்கள் அலை அலையாக திரண்டு வந்ததினால் வீரசிங்க மண்டத்தினுள் மாநாட்டை நடாத்தி முடிக்க இயலாது. என்றுணர்ந்த, மாநாட்டு அமைப்பாளர்கள் மண்டபத்திற்கு வெளியே விசேட அலங்கார சிகரமேடை போட்டு நிகழ்ச்சிகளை கோலாகலமாக நடத்திக் கொண்டிருந்தனர்.

யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து அலங்கார எழுச்சி ஊர்வலங்கள் கூட்ட மண்டபத்தை நோக்கி வந்து கொண்டிருந்தன. அப்பொழுது தமிழக முஸ்லிம் அறிஞர் நைனா முஹம்மது உணர்ச்சி வசமாக உரையாற்றிக் கொண்டிருந்தார்.

வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்னால் உள்ள பிரதான வீதியை மக்கள் வெள்ளம் அடைத்து வாகனப் போக்குவரத்தை முற்றாகத் தடை செய்திருந்தது, பாரிய வாகனத்தில் வந்த கலகம் அடக்கும் பொலிசாருக்கு மக்கள் பாதையை விட்டுக்கொடுக்கவில்லை.

திடீரெனக் கேட்ட துப்பாக்கி வேட்டு மாநாட்டு மண்டப மைதானத்தை இருள் சூழ்ந்து கொண்டது. ஐயோ என்ற அழுகை ஒலி ஒரே சமயத்தில் எழுந்தது. கண்ணீர்ப்புகை தடியடிப் பிரயோகம் நடைபெற்றது. மேடையில் இருந்த மாநாட்டுத் தலைவர் பேராசிரியர் வித்தியானந்தன்மயக்க முற்று கீழே விழுந்தார். மூச்சு விட

- நக்கீரன் -

முடியவில்லை. சனசந்தடி ஓய்ந்து கண்விழித்துப் பார்க்கிறோம், மைதான முன்றலில் கொடிக்கம்பத்தின் கீழ் இருந்தவர்களில் ஒன்பது பேர்கள் பிணமாகக் கிடந்த சோகக் காட்சியைக்காண்கிறோம். சுற்று முற்றும் பார்க்கிறோம் எங்கும் சோக மயம். கடலைப் பைகள், துவிச்சக்கர வண்டிகள், பல் வேறு வகையான காலணிகள், கைக் கடிகாரங்கள் மட்டுமே கண்ணுக்குப் புலப்பட்டன. ஏதோ பாரிய யுத்தம் நடைபெற்று ஓய்ந்திருந்த மாதிரி யாழ். கோட்டை முற்றவெளி மைதானம் ஒரு கணப்பொழுதில் காட்சியளித்தது.

அன்று காட்சியளித்த கோட்டை முற்றவெளிப் பிரதேசம் இன்றும் 25 வருடங்களின் பின்பும் அதே கோலத்தில்தான் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது. படுகொலை செ[illegible] ன் அ[illegible] பது தியாகிகளின் ஆத்மா இன்றும் யாழ். கோட்டை முற்றவெளி மைதானத்தைச் சுற்றி வருவதாக ஒரு உணர்வு தமிழ் மக்களிடையே இருந்து வருகிறது.

1974 ஆம் ஆண்டு தைத் திங்கள் ஒன்பதாம் நாள் நடைபெற்ற தமிழ் மாநாட்டுப் படுகொலைகள் தான் இன்று தமிழ் இளைஞர்கள் மத்தியில் எழுச்சியை ஏற்படுத்தி தீவிரவாதச் செயல்களில் சிந்தனையை தூண்டி விட்டதே என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ''பழிக்குப்பழி'' என்ற உணர்வை இளைய தலைமுறையின் இளம் நெஞ்சங்களில் கொழுந்துவிட்டெரியச் செய்த இப்படுகொலைச் சம்பவம் கடந்த 25 ஆண்டுகளாக தமிழ் மக்கள் உள்ளத்தில் ஓர் மாறாத வலுவை ஏற்படுத்தி விட்டது.

தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகளை 'கொலை' தான் என்று அன்று ஏற்றுக் கொண்ட ஐ.தே. கட்சி அரசு இச் சம்பவங்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் தேட முன்வரவில்லை. யாழ்ப்பாணம் பிரஜைகள் குழுவினால் நியமிக்கப்பட்ட உயர்நீதி மன்ற நீதியரசர்களான கிறெட்சர், மாணிக்கவாசகர், வண. பிஷப், குலேந்திரன் ஆகியோர் அடங்கிய விசாரணைக்குழு அளித்த தீர்ப்பின் அடிப்படையில் பொலிசார் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டபோதும் அரசு எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதற்குமாறாக சன்சோனி ஆணைக்குழுவினர் முன்னால் ஆஜராக அரச சட்டத்தரணி தென்னக்கோன் தமிழ் நாட்டுப் படுகொலைகளுடன் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளை அரச தரப்பு சாட்சிகளாக மாற்றி தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தியவர்கள் மீது பழிபோட முற்பட்டார். அன்றுநடைபெற்ற இச்செயல் இன்றும் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

இந்தியாவில் ஜாலியின் வாலாபாக் என்னும் இடத்தில் இடம்பெற்ற படுகொலை இந்திய மக்களை எப்படி எழுர்ச்சி பெறச் செய்ததோ [illegible] அ[illegible]ந[illegible]ால் 1974 ஆம் ஆண் ஜனவரி 9 ஆம் திகதி நடைபெற்ற படுகொலைச் சம்பவமும் தமிழ்மக்களின் சிந்தனையில் ஒருதிருப்பத்தை ஏற்படுத்தியது. இச் சிந்தனைக்கும் சிகரம் வைத்தாற் போல் புத்தளம் பெரிய பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்ட முஸ்லிம்சகோதரர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவமும் தமிழ் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.

புத்தளத்தில் இஸ்லாமிய சகோதரர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கும் விசாரணை இல்லை. தமிழாராய்ச்சிமாநாட்டுப்படுகொலைகளுக்கும் விசாரணை இல்லை இருபத்தைந்து வருடங்களுக்கு முன் ஆட்சி செய்த பேரினவாத ஆட்சியாளர்கள் எப்படி, எப்படியெல்லாம் தமிழ் மக்களின் படுகொலைகள் சம்பந்தமான விடையங்களைக் கையாண்டார்களோ அதே பாணியைத் தான் இன்றும் அதே ஆட்சியாளர்கள் கையாண்டு வருகிறார்கள்,

சிங்கள ஆட்சியாளர்களின் இத்தகைய செயல்கள் தான் இன்று தமிழ் இளைஞர்களை ஆயுதமேந்திப் போராடத் தூண்டியதென்பது எவ்வளவு தூரம் யதார்த்தமானதென்பதுசொல்லாமலே விளங்கும்.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சி பீடத்தில் இருந்தால் என்ன? பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சி பீடத்தில் இருந்தால் என்ன? ஆளும் இனத்தால் ஆளப்படும் தமிழ் இனத்திற்கு எந்த விதமான நீதியும் கிடைக்கப்போவதில்லை. என்பதையே தமிழாராய்ச்சி மாநாடு முதல் குமார் பொன்னம்பலம் படுகொலை வரையான சம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றது. தமிழினம் கௌரவமான ஓர் இனமாக இருப்பதற்கு ஒத்ததான வழிமுறையைக் கண்டறிய வேண்டியது காலத்தின் தேவை. என்பதை இனியாவது ஆட்சியாளர்கள் உணர்ந்ததால் மட்டுமே இலங்கையின் அரசியல் எல்லைக்குள் அதன் இறைமையைப் பாதுகாக்க முடியும். ★

# இந்து ஆலயங்களைப் பராமரிப்பது தமிழ் அறிஞர்களின் கடமையாகும்

### யாழ் - ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்து சமயத்தில் மட்டும் எந்தவொரு பலம் வாய்ந்த நிறுவனமும் இல்லை. எனவே இங்கே கூடி இருக்கின்ற யாழ். பல்கலை கழக உப வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அரச அதிபர் க. சண்முகநாதன் மற்றும் சமய அபிமானிகள் போன்ற பெரியார்கள் ஒருங்கிணைந்து ஒரு நிறுவனத்தை நிறுவி செயற்பாடுகளை, சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் ஆரம்பிக்க வேண்டும்.

சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பவளவிழா முதல் நாள் நிகழ்வில்உரையாற்றிய ஊர்காவற்றுறை நீதிபதி இ. த. விக்கினராஜா மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்கா தேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெற்ற முதல் நாள் நிகழ்வுக்கு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமை வகித்தார்.

நீதிபதி இ. த. விக்கினராஜா தமது உரையில் மேலும் கூறியதாவது.

இன்றைய விழா நாயகி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது தலைமையில். இந்து அன்பர்கள் அன்பளிப்புக்கள் பெற்று ஒரு நிதியம் உருவாக்கி அந்நிதியத்தினூடாக ஆலய பரிபாலனர்களுக்கு உரிய பயிற்சியறிவை வழங்கி எமது ஆலயங்களைச் சீராக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாம் நடவடிக்கை எடுக்கத் தவறுவோமானால். எதிர் காலத்தில் எமது சிறார்கள் பெருமளவில் பாதிக்கப்படுவதுடன் சமய ஒழுக்க நெறிகளை பின்பற்ற முடியாத நிலை ஏற்படும் என்றார்.

## மக்களை குடியமர்த்த நடவடிக்கை

போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து பாண்டியன் தாழ்வு புனித அன்னாள் ஆலயத்தில் தஞ்சமடைந்திருக்கும் மக்களை வேறு இடத்தில் குடியமரச் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

புனித அன்னாள் ஆலய பங்குத்தந்தையின் அனுசரணையுடன் நடக்கவுள்ள இவ் ஏற்பாட்டிற்காக பெரிய கட்டடம்ஒன்றுஓலையால் வேயப்பட்டு அதில் மக்கள் குடியேற்றப்பட இருப்பதாகவும் அதற்கான பொருட்கள் வந்து சேர்ந்து விட்டதாகவும் தெரிய வருகிறது

## பாகிஸ்தான்...

களில் சிமன்ஸ் சேவ்வோன் முறையே 3, 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

அடுத்துதுடுப்பெடுத்தாடக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தான் அணிப் பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது மள மளவென இலக்குகளை இழத்து 39வது ஓவரில் தனது அனைத்து இலக்குகளையும் இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்திரேலிய அணியில் அதிகபட்சமாக நிக்கி பொன்டிங் 32 ஓட்டங்களையும், அடம் கில் கிறீஸ்ட் 27 ஓட்டங்களையும் மைக்கல் பேவன் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களையும் பெற்றனர், பாகிஸ்தான் அணி சார்பில் அப்துல் ரசாக், சொகைப் அக்தர் வக்கார் யுனிஸ் ஆகியோர் முறையே 4,3,2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

12 லீக் போட்டிகளை கொண்ட இப்போட்டித் தொடரின் இரண்டாவதில் இன்று இந்திய பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

(த-29)

# சிறைச்சாலை மோதல் பற்றி பூரண விசாரணை வேண்டும்

## இரா. சம்பந்தன் எம். பி கோரிக்கை

(களுத்துறை)

களுத்துறைச் சிறைச்சாலையில் -அண்மையில் நடந்து முடிந்த கொடூரச் சம்பவம் போல இனியும் தொடராமல் இருக்க வேண்டுமானால், இதுபற்றி நடாத்தப்படும் விசாரணையில், தமிழ்க் கைதிகளுக்கு மரணம் எவ்வாறு ஏற்பட்டது. ஏனையோர் எவ்வாறு காயமுற்றனர்? இச்செயலுக்கு காரணகர்த்தா யார்? என்பதை திட்டவட்டமாக தீர்மானிக்க வேண்டும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகமும்திருமலை எம். பியுமான இரா. சம்பந்தன் ஜனாதிபதியை கேட்டுள்ளார்.

களுத்துறைச்சிறைசாலையில் அடிக்கடி மோதல் சம்பவங்கள் நிகழ்வதைப் பார்க்கும் போது சிறைச்சாலை நிர்வாகத்தினருக்கும் தமிழ் கைதிகளுக்கும் இடையே சுமுகமான உறவுகள் நிலவாதிருப்பது தெளிவாகத் தெரிகிறது

இந்நிலையை மாற்றி மேலும் இவ்வாறான மோசமான நிலைமைகள் தொடராதிருக்க சிறைச்சாலை நிர்வாகத்தை சீர்படுத்துவது தொடர்பான விடயங்களையும் விசாரணையின் போது பரிசீலனை செய்ய வேண்டும்.

## ஆசிரிய இடமாற்றம் ரத்துச் செய்யப்பட வேண்டும் என கோரிக்கை

[ஏறாவூர்]

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலின் பின் வடக்குக் – கிழக்கு மாகாணங்கள் உட்பட பல்வேறு பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆசிரிய இடமாற்றம் உடனடியாக ரத்துச் செய்யப்பட வேண்டும் என அகில இலங்கை இஸ்லாமிய சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து சங்கத்தேசிய தலைவர் ஏ. அப்துல்அஸீஸ் மாகாணக் கல்வியமைச்சின் செயலாளருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி உள்ளார்.

குறிப்பாக கல்முனைப் பிரதேசத்தில் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் பலர் மாகாணக் கல்வியமைச்சின் செயலாளரது அங்கீகாரம் மற்றும் இடமாற்ற சபையின் அங்கீகாரம் பெறாமல் இடமாற்றம் செய்யப்பட்டதால்.

இந்த இடமாற்ற உத்தரவு வாபஸ் பெறப்படாது விட்டால் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாயும் முன்னறிவிப்பு செய்துள்ளார். (செ–5)

## கறுப்புப்பட்டி அணிந்து துக்கம் அனுஷ்டிக்க பல்கலை மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்!

குமார் பொன்னம்பலத்தின் மறைவை யேட்டி யாழ். பல்கலைக்கழகத்தின் சகலபீட மாணவர்களும் இன்றும் நாளையும்துக்கதினம் அனுஷ்டிக்கவுள்ளனர்.

குமார் பொன்னம்பலத்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் இன்றும், நாளையும் யாழ். பல்கலைக்கழக சகல பீடமாணவர்களும் கறுப்புப்பட்டிஅணிந்து தமதுதுக்கத்தைத் தெரிவிக்குமாறு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் கேட்டுள்ளார்.

## புனர்வாழ்வுப் பணிகள் மூலம் கருத்துக்கணிப்பு; உலகவங்கி நடவடிக்கை

(கொழும்பு)

வடக்குக் - கிழக்கு மாகாணங்களி புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் சமாதானத்திற்கான வழிவகைகளைஏற்படுத்துவது தொடர்பான கருத்துக்கணிப்பொன்றை உலக வங்கி மேற்கொள்ளவுள்ளது.

இக்கருத்துக் கணிப்பை கொழும்பு மனித நேய முகவர் இணையத்தின் அனுசரணையுடன் இக்கருத்துக் கணிப்பு நடைபெறவுள்ளது.

இக்கருத்துக் கணிப்பை யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, அம்பாறை, மட்டக்களப்பு, மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ளது.

## மரண அறிவித்தல்

### சிவசம்பு ஆனந்தநடராசா
(மண்டைதீவு)

மண்டைதீவை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு ஆனந்தநடராசா 08-01-2000 அன்று காலமானார்.

இவர் சிவசோதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - யோகம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிந்தாமணி - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் வசந்தரூபன்[கொழும்பு], தயாளன் (கனடா] ஜெயந்தன் [சுவிஸ்], சுதர்ஷன் [கனடா], முகுந்தன்(ஆசிரியர், ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயம்,] திலீபன் [கனடா] ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற ரஞ்சினிதேவி, மற்றும் கமலினி [கனடா], சிவாஜினி [சுவிஸ்] கௌசலா [கொழும்பு] ஆசியோரின் அன்பு மாமனாரும் கஜிபன், சுஜீபன், நல்லுஜன், அபிஜயன் ஆகியோரின் அன்புப் பேரனும், மங்கயற்கரசி, மகேஸ்வரி, ரதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், இராசகுலநாயகி, யோகநாயகி, காலஞ்சென்ற நடேசமூரத்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற கோபாலபிள்ளை மற்றும் சண்முகலிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10-01-2000) கொழும்பில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்:

தகவல்

59/1, மூர்ஸ் வீதி, வெள்ளவத்தை
தொ. பேசி: 500536

ஆ. சண்முகலிங்கம் [சகலன்]
23, றக்கா றோட்.

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஆம் 10 திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

### உரிமைக்காக...

தெரிவிக்கப் பட்டிருந்ததாவது திரு குமார் பொன்னம்பலம் அவர்களின் படுகொலை மிகக் கோழைத்தனமான ஒரு பயங்கரவாதச் செயலாகும் இது ஒரு தனிநபருக்கு எதிரான குற்றச் செயல் மட்டுமல்ல ஒட்டுமொத்தமாக தமிழினத்துக்கே எதிரான குற்றமாகும் ஏனெனில்அவர்முழுத்தமிழ்ச் சமூகத்தினதும் உரிமைகளையும்அபிலாசைகளையும் முன்னெடுப்பவராக வாழ்ந்தார்.

இக்கொடிய செயலைகண்டிக்கிற அதேவேளை கொலையாளியைக் கண்டு பிடித்து நீதியின் முன் நிறுத்துமாறு நாம் அரசாங்கத்துக்கு அழைப்பு விடுவிக்கிறோம் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

### குமாரின்...

பட்டது.

ஊர்வலத்தில் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

ஊர்வலம், கனத்தை இந்து மயானத்தை நண்பகல் 12 மணிக்கு அடைந்தது.

அங்கு இடம் பெற்ற கூட்டத்திலும், ஊர்வலத்திலும் பல்கலைக்கழக மாணவர்கள் சட்டக் கல்லூரி மாணவர்கள், சட்டத்தரணிகள் உட்பட சுமார் பத்தாயிரம் பேர் கலந்து கொண்டார்கள்.

ஊர்வலத்தின் பின்னர் அங்கு இடம் பெற்ற அஞ்சலிக் கூட்டத்தின் பின் 12.45 மணிக்கு குமாரின் பூதவுடல் அக்கினியுடன் சங்கமமாகியது.

### புலோலிப்...

ராட்சி ஈ,பி,டி,பி அமைப்பாளர் திரு. ஐ. சிறிரங்கேஸ்வரன் இராணுவ பிரிகேடியருடன் தொடர்பு கொண்டுள்ளார்.

இதேவேளை வடமராட்சிப் பகுதியில் திடீர் சோதனைகளில் இராணுவத்தினர். ஈடுபட்டுவருகின்றனர். என்றும் தெரிவிக்கப் படுகிறது.

### தமிழருக்கு...

இதன் பிரதிபலிப்பாக எனக்கு கொலைப் பயமுறுத்தல்களும், இனந்தெரியாதோர் என்னைப் பின் தொடருதலும் தொடர்கிறது. இச்செயற்பாடுகளானது எனது உயிருக்கே உத்தரவாதமற்ற தன்மையை தேற்றுவித்துள்ளதாகவே நான் நினைக்கிறேன் என்றும் கூறியுள்ளார். (வ-09)

## ஜனாதிபதியை கொல்லத்திட்டமிட்டவர்கள் இராணுவ ஆட்சி அமைக்க இருந்தனர்

கொழும்பு நகர மண்டபத்தில் பொ. ஐ. முன்னணியின் இறுதிப்பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவைப் படுகொலை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட சதித்திட்டத்தில் புலிகளுடன் இணைந்து வர்த்தகர்களும் பத்திரிகையாசிரியர்களும் சில இராணுவ அதிகாகளும் செயற்பட்டது தெரியவந்துள்ளதாக இரகசியப் பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

அரசையும் ஜனாதிபதியையும் கடுமையாகச் சாடிவந்த இவர்கள் கடைசியாக அவரை கொலை செய்ய முயன்றார்கள் அவர்கள் என்றும் கள் ஜனாதிபதியை கொலை செய்த பின் இராணுவ அரசாங்கம் ஒன்றை நிறுவ இருந்ததாம் பொலீஸார் மேலும் தெரிவித்தனர்.

## ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளுக்கு ஆசிரியர்களை தெரிவுசெய்வதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியது

(கொழும்பு)

விரைவில் நாடெங்கிலும் உள்ள அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு 2000 - 2001 ஆம் ஆண்டுக் காலப்பகுதிக்கு ஆசிரியர்களைப் பயிற்சிக்கு தெரிவதற்கான அனுமதியைக் கல்வி உயர்கல்வி அமைச்சர் வழங்கியிருக்கிறார்.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளிவருமென்று தெரிய வருகிறது என கல்வி உயர்கல்வி அமைச்சிலுள்ள ஆசிரியர் கல்வி நிர்வாகக் கிளைப் பணிப்பாளர் ஜே. ஏ. அறங்கல இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்க நிர்வாகச் செயலாளருடன் தொடர்பு கொண்டு தெரிவித்தார். இதுவரை பயிற்றப்படாது இருக்கும் ஆசிரியர்களுக்கு இப்பயிறசி நெறி பேருதவியாக அமையும்.

## குமாரின் படுகொலைக்கு பல்கலைக் கழக மாணவர் கண்டனம்

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் செயலாளரும் பிரபல சட்டத்தரணியுமான குமார் பொன்னம்பலம் அவர்கள் சுட்டுக் கொலை செய்யப்பட்டமையை யாழ். பல்கலை கழக சமூகம் வன்மையாகக் கண்டித்து நிற்கிறது.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மாணவர் 'ஒன்றியம் குமார் படுகொலை தொடர்பாக விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது,

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

அடிமைப்பட்டிருக்கும் தமிழினத்தின் அவலங்களை அது எதிர் நோக்கியுள்ள அடக்குமுறைக் கொடுமைகளை இனப்பற்றுடனும் துணிவுடனும் உலகிற்கு எடுத்தியம்பியமைக்காகவே குமார் பொன்னம்பலம் அவர்கள் இனவாத கொலைஞர்களால் கோழைத்தனமாகப் படுகொலை செய்யப்பட்டார்.

தமிழ் மக்களின் சுபீட்சத்திற்காக தனது கல்வியைப் பயன்படுத்தி அநியாயங்களை எதிர்த்துக் குரல் கொடுத்தவர் அமரர் குமார் பொன்னம்பலம் கிருஷாந்தி குமாரசாமி மற்றும், எமது இளைஞர்கள், யுவதிகள் கட்தப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்டபோது அக்கொடுமையை எதிர்க்குக் குரல் கொடுத்தவர் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள்.

அடிமைப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்த அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களின் ஆன்ம சாந்தியடையப் பிரார த்திப்பதுடன் அ ாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம் என்று தெரிச்க்கப் பட்டுள்ளது. (5.ப)

### உரிமைகளை...

என்று அமரர் குமார் பொன்னம்பலம் காத்திருந்தார்.

தமிழ் மக்கள் மத்தியில் சிதறிக்கிடக்கும் கட்சிகளை ஒன்று சேர்க்க வேண்டுமென்று பல சந்தர்பங்களில் என்னிடம் வலியுறுத்திக்கூறியுள்ளார் என்றார்.

தொடர்ந்து அஞ்சலி உரையாற்றிய.

கொழும்பு மாவட்ட எம். பி. பி. பி. தேவராஜ் தனது உரையில் தமிழ்மக்களின் உரிமைக்காக துணிந்து குரல் கொடுத்தவர் என்பதை அனைத்து மக்களும் நன்கு அறிவர் என்றார்.

தமிழர் வாழ் செயற்பாட்டுக் குழுவைச்சேர்ந்த சாந்தி திருநாவுக்கரசு பேசுகையில் பெரும் பான்மையின அரசுகள் சிறுபான்மையினருக்கு உரிமைகள் கொடுக்க வில்லை என குமார்பொன்னம்பலம் கவலை தெரிவித்திருந்தார் என்று கூறினார்

மேல்மாகாண சபை உறிப்பினர் மனோ கணேசன் உரையாற்றும் போது, நீதியான முறையில் சமாதானம் மலரவேண்டுமென்ற குறிக்கோளுடன் சகலரையும் ஒன்றிணைக்க வேண்டுமென்று, அதற்கான முயற்சியில் ஈடுபட்டு வெற்றியைக் காணவிளையும் சந்தர்ப்பத்தில் நரித்தனமான முறையில் குமார் கொலை செய்யப்பட்டுள்ளார் என்று குறிப்பிட்டார்.

இவ்வஞ்சலிக் கூட்டத்தில், தமிழர் பணிக்குழுவைச் சேர்ந்த திரு. என். விஜயசிங்கம், அகில இலங்கைத் தமிழ்ச் காங்கிரஸ்கட்சியைச் சேர்ந்த திரு. ந. குமரகுரு, ஐ, தே. கட்சி மட்டக்களப்பு மாவட்ட பா. உறுப்பினர், அலி சாகிர்மௌலான, திரு. இராச புவனேஸ்வரன் கொழும்பு பல்கலைக்கழக மாணவர் மன்ற செயலாளர், சட்டக்கல்லூரி மாணவமன்றத் தலைவர் திரு. நிலக்ஷன் உட்பட பலரும் அங்கு அஞ்சலி உரை நிகழ்த்தினார்கள்.

### விமானக் கடத்தல் விசாரணைக் குழு

கடத்தப்பட்ட இந்தியன் எயர் லைன்ஸ் விமானம் தொடர்பாக ஆராய்வதற்கு விசாரணைக்குழு அமைக்கப் பட்டுள்ளதாக சி.பி.ஐ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### 35 இளைஞர்கள்..

உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தொடர்ந்து 7 நாட்களுக்கு தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக கொழும் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜெகத் ஜெயவர்த்தனா தெரிவித்துள்ளார்

### நேரில்...

வர் சித்தார்த்தன் எம். பி. ரெலோ எம்- பி செல்வம் அடைக்கலநாதன், ஈ, பி. ஆர். எல். எவ் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமசந்திரன். வாசுதேவ நாணயக்கார, திருமலை நகரசபைத் தலைவர் திரு. சூரியமூர்த்தி ஆகியோர் நேற்றுக் காலை குமாரின் இல்லத்திற்குச் சென்று அஞ்சலி செலுத்தினர்.